நல்லூர்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 29 வியாழக்கிழமை (15-10-1992) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 322

வடக்கின் விவசாயப் பொருளாதார வளர்ச்சிக்கு கனடா நேரடி உதவி

கொமன்வெல்த் நாடுகளின் அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக

யாழ்ப்பாணம், அக்டோபர் 15

வடக்கின் விவசாயம், விவசாய பொருளாதாரம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றுக்கு நேரடியாக நிதி உதவி கிடைக்கவிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கொமன் வெல்த் நாடுகளின் அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுனம் தயாரித்துள்ள இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கும் பொறுப்பு கனடாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் நாடுகளின் அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனம், கொமன்வெல்த் நாடுகள் அமைப்பின் ஒரு பிரிவாகும். பிரஸ்தாப நிறுவனத்தின் தலைமை அலுவலகம் லண்டனில் இயங்குகிறது.

பிரஸ்தாப நிறுவனம் வெளியிட்டுள்ள ஆகப் பிந்திய அறிக்கையில் வட பகுதியின் விவசாய, விவசாய பொரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

பளையில் காவல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 15

தமிழீழ காவல் துறையின் பளைப் பிரதேசத்துக்கான காவல் பணிமனை நேற்றுக் காலை 7 மணி அளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தியினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியும், தமிழீழ காவல் துறைக் கொடியை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும் ஏற்றி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க திரு. தமிழேந்தி காவல் பணிமனையைத் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் உட்பட இயக்கத்தின் பல முக்கிய பிரமுகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

மிருசுவில் பிரதேசத்தில் இருந்து எழுதுமட்டுவாள், முகமாலை, புலோப்பளை, பளை, புதுக்காட்டுச் சந்தி, இயக்கச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ளமக்கள் இப் பணிமனையில் தங்கள் புகார்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

தொண்டர் நிறுவனங்சள் அகதிகள் குறித்து ஆராய்வு

கொழும்பில் இன்று கூட்டம்

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் முக்கிய கூட்டம் ஒன்று கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு அகதிகளின் நிலைமை குறித்தும் ஆராயப்பட உள்ளது.

அகதிகளுக்கு அரசு வழங்கி வந்த நிவாரணம் அரைவாசியாக வெட்டப்பட்டமை, பின்னர் இப்போது மீண்டும் முழு அளவில் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டமை, இவ்வாறான திடீர் முடிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் என்பன குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிய வருகிறது.

வடக்கு - கிழக்கு அகதிகளுக்கு உதவுவதில் உள்ள தடங்கல்கள், கஷ்டங்கள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட உதவி நடவடிக்கைகள் குறித்து இன்றைய கூட்டத்தில் மீளாய்வு செய்யப்படும். வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது. (அ-10)

படையினர் துப்பாக்கி பிரயோகம்

யாழ்ப்பாணம், அக். 15

தெல்லிப்பழைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் ஷெல் தாக்குதலும் நடத்தினர்.

(இ-162-126)

அகதிகளுக்கு உலர் உணவு எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 15

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு வழங்குவதற்காக யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் உலர் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு மெதடிஸ்த சபைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே அனுமதி மறுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மெதடிஸ்த சபைப் பிரதிநிதி ஒருவர், உலர் உணவுப் பொருள்களை கப்பலில் எடுத்து வருவதற்கு அனுமதி கேட்டதாகவும்—

யாழ்ப்பாணத்தில் உலர் உணவுப் பொருள்கள் போதிய அளவு இருப்பதாக அரச அதிகாரிகள் தெரிவிப்பதால் பணத்தைக் கொடுத்து அங்கேயே அவற்றை வாங்கும்படி மெதடிஸ்த பிரதிநிதியிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (இ-162)

அளவெட்டியில் படையினரிடம் சிக்கியோரில்36 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், அக். 15

வலி. வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அளவெட்டியில் இராணுவத்திடம் சிக்குண்டு இலவாலையில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 36 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விடுதலையானோரில் குழந்தைகள், சிறுவர், ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

உறவினர்களைப் பிரிந்திருந்தோரை மீண்டும் ஒன்று சேர்க்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் திட்டத்துக்கு அமையவே இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

புலிகளின் அரசியல் மதியூகமே ராணுவ வெற்றிக்குக் காரணம்!

ஆங்கில வார இதழில் விமர்சனம்

யாழ்ப்பாணம், அக். 15

விடுதலைப் புலிகளின் சரித்திரத்தைப் பார்த்தால், போரிட வேண்டும் என்ற வெறும் உத்தியிலும் பார்க்க கணக்குப்பார்த்து மேற்கொள்ளப்பட்ட பல அரசியல் நகர்த்தல்களால் தான் (Political Moves) அந்த இயக்கம் இன்று இராணுவ வலிமை பெற்றதாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்ற உண்மை புலனாகும்.

"சண்டே ஐலண்ட்" வார இதழில் தாரகி எழுதிய "போருக்கான கருவிகள்" என்ற விமர்சனத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விமர்சனத்தின் முக்கிய சில பகுதிகள் வருமாறு:-

இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை முறியடிக்க திரு. பிரபாகரன் தொடராகப் பல அரசியல் நகர்த்தல்களை மேற்கொண்டார் என்பது நன்கு தெரிந்த விஷயமாகும்.

போருபாயங்களில் எல்லாவித உபகரணங்களையும் பயன்படுத்தக்கூடிய நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று உள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாளை கோப்பாயில் மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்பு நிதிப் பிரிவினர் இப்போது உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதியை மக்களிடமிருந்து சேகரித்து வருகிறார்கள்.

அந்த வகையில் நாளை வெள்ளிக்கிழமை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் மக்களிடம் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படும்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பி. ப. 2 மணி முதல் 5 மணி வரை கோப்பாய்ப் பகுதி மக்கள் தமது [illegible] (அ)

இலங்கைக்குக் கடனாக 11 கோடி 40 லட்சம் டாலர்

லண்டன், அக். 15

ஸ்ரீலங்காவின் பொருளாதார அபிவிருத்திக்கு 11 கோடியே 40 லட்சம் டாலர்களை சர்வதேச நாணய நிதியம் கடனுதவியாக வழங்கி உள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 30 கோடி டாலர்களை ஸ்ரீலங்காவுக்கு வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கடன் பணத்தைக் கொண்டு ஸ்ரீலங்கா அரசு குறிப்பிட்ட காலப்பகுதியில் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் போக்கிவிட வேண்டும் என்றும்—

வெளிநாட்டு மூலதனத்துடனான தொழில் துறையை வளர்ச்சி அடையச்செய்ய வேண்டும் என்றும்— சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தி உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

(அ-10)

வனவளம் காத்து
மழை வளம் பேணுவோம்

8 கோரிக்கைகளை முன்வைத்து 6 எதிர்க்கட்சிகள் போராட்டம்

கொழும்பு, அக். 15

பொதுமக்களைப் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளடங்கிய எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்துவதென கடந்த ஆறாம் திகதி கூடிய 6 எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

★ அவசரகாலச் சட்ட விதிகள் நீக்கப்பட வேண்டும்.

★ வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும்.

★ ஓய்வூதியர்களுக்கு வாக்களிக்கப்பட்ட 260 ரூபா கொடுப்பனவு உடன் வழங்கப்பட வேண்டும்.

★ அரச ஊழியர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும்.

★ பல்வேறு காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

★ உணவு முத்திரைப் பெறுமதியை அதிகரிக்க வேண்டும்.

★ உரமானிய வெட்டை நீக்க வேண்டும்.

★ வெகுஜன சாதனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

இவையே அந்த எட்டுக் கோரிக்கைகள் ஆகும்.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேசவிமுக்தி ஜனதாக் கட்சி என்பன பங்குபற்றின.

இக் கோரிக்கைகள் மீது மக்கள் ஆதரவைத் திரட்ட போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை விநியோகிப்பதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-10)

மனித சங்கிலி போராட்டம் நவம்பர் 15 இல்

கூட்டு எதிர்க்கட்சி அணியின் மனித சங்கிலி போராட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து இரத்தினபுரி வரை நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 13 ஆம் திகதி இப்போராட்டம் நடத்தப்படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. சீரற்ற காலநிலை காரணமாக திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது (இ-எ)

ரூபா 100 வெள்ளி நாணயம்

யாழ்ப்பாணம், அக். 15

கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய சம்மேளன விளையாட்டு போட்டிகளின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட 100 ரூபா நாணயத்தை இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையில் 250 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், அக், 15

எழுத்தாளர் அநு. வை. நாகராஜன் எழுதிய 'தேடலும் பதித்தலும்' என்னும் அறிவியலாளர் வரிசை நூலின் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் அன்று பி. ப. 3-30 மணிக்கு அறிமுக விழா ஆரம்பமாகும்.

நூல் அறிமுக உரையை யாழ் மத்திய கல்லூரி அதிபர் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை நிகழ்த்துவார்.

கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, அதிபர் திரு. இ. மகேந்திரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் ஆகியோர் பாராட்டுரைகளையும்—

உப அதிபர் திருமதி கோகிலா மகேந்திரன், உப அதிபர் வண்ணை சே. சிவராஜா, உதவிக் கல்விப்பணிப்பாளர் வை. சுந்தரலிங்கம் ஆகியோர் கருத்துக்களையும் வழங்குவர். (அ-51)

வெள்ளைப் பிரம்பு தினவிழா

யாழ்ப்பாணம், அக். 15

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டி, யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், யாழ். லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும்.

நிகழ்ச்சிக்கு யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சே. இராசேஸ்வரன் தலைமை வகிப்பார்.

சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஈ. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகவும், வலயத் தலைவர் லயன் எஸ். இராமகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

உதயன் ஆதரவில்

சதுரங்கப் போட்டி இன்று ஆரம்பம்

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தும் சதுரங்கச் சுற்றுப்போட்டி இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த மாணவர்களுக்கான போட்டிகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் தினசரி காலை 8 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

15, 19 வயதுப் பிரிவினர்களுக்கிடையில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளை உடற்பயிற்சிக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. அருணகிரிராஜா செய்துள்ளார். (உ)

ஈழ அகதிகளுக்காக இந்தியாவுக்கு இதுவரை ரூ. 50 கோடி செலவு

சென்னை, அக். 15

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக புதுடில்லி அரசு இதுவரை 50 கோடி இந்திய ரூபாவைச் செலவழித்துள்ளது—

மறுவாழ்வுத்துறை மாநில வருவாய்த்துறை சிறப்பு ஆணையர் சி. எம். ராம் தான் இதனைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் தற்போது சுமார் 83 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.

இதுவரை 24 ஆயிரம் அகதிகள் தாயகம் திரும்பிச் சென்றுள்ளனர். இன்னும் 2 ஆயிரம் அகதிகள் இலங்கை திரும்பத் தயாராக உள்ளனர்.

பருவநிலை சீரானதும் அவர்கள் கப்பல் மூலம் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

அக்டோபர் ஓய்வூதியம் திங்கள் வழங்கபபடும்

யாழ்ப்பாணம், அக். 15

அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இம்முறை வவுச்சர்கள் நேரத்துடன் செயலகத்துக்கு வந்து சேர்ந்தபோதிலும் நிதி நெருக்கடி காரணமாக ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

தீபாவளிப் பண்டிகை இம்மாதம் 25 ஆம் திகதி வருவதால் ஆகப்பிந்தியது 20 ஆம் திகதியாவது ஓய்வூதியத்தை வழங்குமாறு—

வடமாநில ஓய்வூதியர் சம்மேளனத்தின் செயலாளர் அரச அதிபருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் கேட்டுள்ளார். (அ-8)

ஆசிரியர் சம்பளம் பணமாக!

யாழ்ப்பாணம், அக். 15

ஆசிரியர்களுக்கான அக்டோபர் மாதத்துக்குரிய சம்பளத்தைப் பணமாக வழங்க இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பாடசாலை அதிபர்கள் இது தொடர்பாக வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

பிரிட்டிஷ் அமைச்சர் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, அக். 15

பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் லொய்ட் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்துப் பேசினார்.

தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சரான திரு. பொய்ட் நான்கு தினங்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது அவருடன் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் திரு. பீல்ம், பிரதி தூதர் ஆர். பி. நாஷ் ஆகியோரும் சமூகமளித்து இருந்தனர்.

ஜனாதிபதிக்கு உதவியாக வெளியுறவுச் செயலாளர் பேர்னார்ட் திலகரத்ன, வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் பேச்சுகளில் கலந்து கொண்டனர். (இ எ)

பூநகரியில் இரவில் தொடரும் ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, அக். 15

பூநகரிப் பகுதி இராணுவ முகாமில் இருந்து தினமும் நள்ளிரவு வேளைகளில் கிளாலிப் பகுதியை நோக்கியும், கடற்பகுதியை நோக்கியும் அடிக்கடி ஷெல் வீச்சு நடத்தப்பட்டு வருகிறது.

கடற்படைப் பீரங்கிப் படகில் இருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் கிளாலிப் பகுதி மக்கள் இரவு வேளைகளை பதற்றத்துடன் கழித்து வருகின்றனர். (ஒ-117)

நூல் வெளியீடும் அறிமுக விழாவும்

இயல்வாணன் எழுதிய மீரா வெளியீடான ''சுவடுகள்'' நூல்வெளியீடும், அறிமுகவிழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (த)

யாழ். இணுவில் மத்திய கல்லூரி

மாணவர் பிரவேசம் 1993

முதலாம் ஆண்டில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கல்லூரிச் சூழலில் உள்ளவர்கள் பிள்ளைகளுடைய விண்ணப்பங்களை பிறப்புச் சாட்சிப் பத்திரத்துடன் 1992-11-15 ஆம் திகதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

(1987-02-01 — 1988-01-31 ஆம் திகதிக்கிடையில் பிறந்தோர் சேர்வதற்கு தகுதியுடையவரா(வர்)

அதிபர்.

[5401]

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

அபர பக்க சதுர்த்தி விழா

15 — 10 — 92 வியாழன்

புதிதாக வடிவமைக்கப்பெற்ற நவீன பல்லக்கில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

சிறப்பு நிகழ்ச்சிகள்

சொற்பொழிவு — பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை

இன்னிசை கச்சேரி — பிரம்மஸ்ரீ எஸ் இராமநாத சர்மா அவர்கள்

அடியார்கள் அனைவரையும் மேற்படி விழாவில் பங்கு பற்றி விநாயகரின் அருள்பெற அழைக்கின்றோம்.

[22903] — உபயகாரர்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்.

முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக 30-9-92 இல் மூடப்பட்ட சகல கிளைகளின் வாக்காளர் பட்டியலில், அண்மைக் கால நடவடிக்கைகளால் மூடப்பட்ட குப்பிழான் கிளை இல. 20, ஏழாலை வடக்கு கிளை இல 21, ஏழாலை கிழக்கு கிளை இல. 22, திடற்புலம் கிளை இல 26, புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிளை இல. 30 ஆகியவற்றின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களில் வாக்காளர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம்

கிளை நிலையம்	பார்வைக்கு வைக்கப்பட்ட கிளை நிலையம்
20 குப்பிழான்	தற்பொழுது ஏழாலை தெற்கில் இயங்கும் 20 ஆம் கிளையில்
21 ஏழாலை வடக்கு	கிளை இல. 23, களவாவோடை, ஏழாலை
22 ஏழாலை கிழக்கு	கிளை இல. 23, களவாவோடை, ஏழாலை
26 திடற்புலம்	கிளை இல. 19, ஈவினை, புன்னாலைக்கட்டுவன்
30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு	கிளை இல. 19, ஈவினை, புன்னாலைக்கட்டுவன்

ஏனைய கிளைகளின் வாக்காளர் பட்டியல்களும் அவ்வவ் கிளைகளில் வாக்காளர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சகல கிளைகளின் வாக்காளர் பட்டியல்களும் 14-10-92 இலிருந்து பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

14-10-92 C/2512 - செயலாளர்

யாழ்ப்பாணம்

கொள்ளுப்பிட்டியில் ரூ. 10 லட்சம் கொள்ளை

கொழும்பு, அக். 15

நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி லிபேர்ட்டி பிளாஸாவில் உள்ள கடை ஒன்றுக்குள் புகுந்த 3 இளைஞர்கள் காசாளரிடம் இருந்து 10 லட்சம் ரூபா பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்மந்தப்பட்டவர்கள் ஓட்டோக்கள் மூலம் தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-த)

யாழ். பல்கலையில் புதிய மாணவர் அனுமதி:

'ராகிங்' குறித்து உபவேந்தர் முன் எச்சரிக்கை அறிவிப்பு

புகார் கிடைத்தால் விசாரணை நடக்கும்

யாழ்ப்பாணம், அக். 15

"யாழ். பல்கலைக்கழகத்தில் 'ராகிங்'கில் ஈடுபடும் மாணவர்கள் விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகளாகக் காணப்பட்டால், கல்வி பயில்வதில் இருந்து அவர்கள் ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்படுவர்."

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இவ்வாறு முன் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்குப் புதிய ஆண்டுக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உபவேந்தர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"புதியாண்டு மாணவர்களை உடல், உள ரீதியாக எவரும் இம்சிக்கக்கூடாது.

எந்த மாணவனும் இம்சிக்கப்பட்டதாக புகார் கிடைத்தால், அது குறித்து விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மாணவன் கடும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்.

குற்றவாளியாகக் காணப்படும் மாணவர் ஒருவருடம் பயிற்சியில் இருந்து இடைநிறுத்தப்படுவார். இதுதான் ஆகக் குறைந்த தண்டனையாகும்" — என்றுள்ளது.

அந்த நாள் (15-10-1991)

நினைவுகள் இன்று

மலர்வு:
27
—
04
—
1962

உதிர்வு:
15
—
10
—
1991

தவப்புதல்வி

சிவகௌரி அம்மன்

அம்மனோ அம்பாள்
ஆதி சக்தியின் அருளே
இதயக் கோவிலே
ஈசனின் மணவாட்டியே
உலகம் போற்றும் கௌரியோ
ஊரார் நெஞ்சங்களில் நிறைந்தாய்
எங்கள் குல விளக்கே
ஏன் அணைந்து போனாய்
ஐயகோ என அழுபவர்
ஒருவரா ஆயிரம் பேராச்சே
ஓலமிடும் குரல் கேட்கவில்லையா?
ஔடதம் உண்டோ உன்னை மறப்பதற்கு
ஃ வரை கூட பிள்ளைகளுக்கு சொல்ல முன்-
மறைந்தாயோ!

உன் பிரிவால் துயருறும்
- அன்பு நெஞ்சங்கள்.

"றியோ கிறீம் ஹவுஸ்",
75, பரங்சல் வீதி,
யாழ்ப்பாணம்.

[22896]

ஓராண்டு நினைவஞ்சலி

தவப்புதல்வி

சிவகௌரி அம்மன்

தோற்றம்:
27-04-1962

மறைவு:
15-10-1991

பூவாக மலர்ந்து
பூவுலகைப் பிரிந்து
பூ மனங்களில் மலர்கின்றாய்-உன்
பூ முகம் என்றும் மறவோம்.

உற்றார், உறவினர்;
நண்பர்கள்.

"றியோ கிறீம் ஹவுஸ்",
சங்கத்தானை, சாவகச்சேரி.

[22897]

ஓராண்டு நினைவஞ்சலி

தவப்புதல்வி

சிவகௌரி அம்மன்

மண்ணில்:
27 — 04 — 1962

விண்ணில்:
15 — 10 — 1991

மலராக மலர்ந்தாய்
மனங்களில் நிறைந்தாய்
மண்ணை விட்டுப் போனாய்
மறவோம் என்றும் நும்மை.

- உறவினர்கள்.

"றியோ கபே"
முல்லைத்தீவு றோட்,
விஸ்வமடு.

[22898]

யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 15

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினர் ஏற்பாடு செய்துள்ள பெண்களின் நோய்கள் பற்றிய யோகாசனக் கருத்தரங்கும், யோக சிகிச்சை முறை பற்றிய விளக்கமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (த-30)

நரசிம்மராவ் மீது பிரேமாவுக்கு வந்த நம்பிக்கை!

கொழும்பு, அக். 15

இந்தியா மீது இலங்கைக்கு சந்தேகம் இல்லை. நரசிம்மராவ் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. நரசிம்மராவ் பிரதமரான பின்னர் இந்தியா மீது சந்தேகம் கொண்ட யுகம் முடிந்துவிட்டதென நான் புதுடில்லியில் திட்டவட்டமாகக் கூறிவிட்டேன்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். (உ-த)

திருட்டில் ஈடுபட்ட ஈழ இளைஞர் கைதானார்

சென்னை, அக். 15

சென்னை ரெட் ஹில்ஸில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் இருந்து தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அண்ணா நகர் மேற்கில் இடம்பெற்ற 5 தங்கச் சங்கிலிகள் திருட்டுத் தொடர்பாகவே இவர் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது பெயர் வின்டன் என்றும்— இவரிடமிருந்து 15 பவுண் தங்கச் சங்கிலிகளும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-த)

விதை நெல் விற்பனை

வடமராட்சி, அக். 15

யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் நலன் கருதி கமநல சேவை நிலையங்கள் மூலம் விதை நெல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பி ஜி - 350, பி டபிள்யு - 351 இன நெல் ரகங்களை விவசாயிகள் தங்களுக்குத் தேவையான அளவு கமநல சேவை நிலையங்களில் பெற்[illegible] மராட்சி கமநல சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(உ-165)

யாழ். பல்கலைக்கழகத்துக்கு

வடக்கு - கிழக்கு மாணவரே கூடுதலாக அனுமதி

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு இம்முறை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்தே கூடுதலான மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வெளி மாவட்டங்களில் இருந்து சொற்ப மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற்றுள்ளனர்.

புதிய மாணவர்கள் பதிவு செய்ததும், அவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

(உ-த)

ராஜீவ் கொலை வழக்கு:

26 சந்தேக நபர்களுக்கும் தமிழில் குற்றப் பத்திரிகை!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நூறு பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையின் தமிழ் நகல் சந்தேக நபர்களுக்கு வழங்கப்பட்டது.

சந்தேக நபர்களான முருகன், நளினி ஆகியோர் குற்றப் பத்திரிகையின் தமிழ் நகலைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த வழக்குத் தொடர்பாக சிறை வைக்கப்பட்டுள்ள 26 பேரும், தாம் ஆங்கில மூலமான குற்றப் பத்திரிகையை ஏற்க முடியாது எனக் கூறி, அதை ஏற்க ஏற்கனவே மறுத்துவிட்டனர் என்பது தெரிந்ததே. (உ)

நாகர் கோவில் நாகதம்பிரான் கோவில்

தீர்த்தத் திருவிழா

15 — 10 — 1992 வியாழக்கிழமை
காலை விசேட பூஜையும் பிரபல நாதஸ்வர,
தவில் வித்துவான்களின் நாத இசையும் நடைபெற்று
பகல் 1 மணிக்கு
விசேட நிகழ்ச்சியாக
ஈழத்தின் வில்லிசை இளவரசர்
"கலைமாமணி" S. S. சர்மா
அவர்களின் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்கும்
★ பார்வதி கல்யாணம் ★
வில்லிசையும் நடைபெறும்.

● இரவு மேளக் கச்சேரிகள், பட்டிமன்றம், மெல்லிசை என்பன நடைபெற்று, சுவாமி சமுத்திர தீர்த்தமாடலும் நடைபெறும்.

[22886]

- உபயகாரர்கள்.

இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

விழிப் புலனற்றோர் பாவிப்பது வெள்ளைப் பிரம்பு.
அதை மதித்து நடக்க நீ நாளும் விரும்பு.

18 - 10 - 1992 ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 00 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் வெள்ளைப் பிரம்பு தின விழா நடைபெற உள்ளது. இவ் விழாவுக்கு சகலரையும் அழைக்கின்றோம்.

- யாழ். லயன்ஸ் கழகம்.

[இ-3485]

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

ஆறாம் ஆண்டு அனுமதி - 1993

இக் கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்வி பயில விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் கல்லூரியின் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களை உடனடியாகப் பெற்று, 31-10-1992க்கு முன்பாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றனர். அனுமதிப் பரீட்சைக் கட்டணம் ரூபா 40/-. அனுமதிப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

[இ-3595]

செ. கேசவராஜன்,
அதிபர்.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஓவ்செட் படத்துடன் கலண்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா புத்தகசாலை, இல. 330, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (22882)

விற்பனையாகின்றது

சகல விதமான தீபாவளி வாழ்த்துக்கள் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும் இடம்: மக்மிலன் புத்தகசாலை, இல. 8, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். [இ-3579]

சைவநெறி வினா-விடை (ஆண்டு 10-11) ஆக்கம் இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் B. A. (Hons) Dip-in Ed. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீகாந்தா புத்தகசாலை, இல. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [22850]

மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோ. க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப்பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. [கி/3541]

வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசங்கரி, ராஜேஸ், ராஜேந்திரகுமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, இல 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [22848]

வெளிவந்துவிட்டது

சைவநெறி ஆண்டு-10 தமிழ் மீட்டலுக்கான வினா-விடை. ஆக்கம்: க. சந்திரசேகரம். மேற்பார்வை: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள், வெளியீடு: சோதி வெளியீட்டு காரியம். ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3466]

இலவச திருமண சேவை

33 வயது, பரணி, கிரகபாவம் 5, வீரசைவம், சவுதியில் தொழில் புரிபவருக்கு மணமகள் தேவை. மணமகன் யாழ். வந்துள்ளார். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [22869]

27 வயது, ரோகிணி, செவ்வாய் 12, கிரகபாவம் 48, B. Sc ICMA மாணவிக்கு மணமகன் Professional தரத்தில் தேவை, லண்டன் செல்வதற்கு வசதியுண்டு. தொடர்பு: ஞாயிறு காலையில், து. விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. (22868)

ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. [இ-3540]

ஆண்டு -6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்: Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [கி-3539]

காணவில்லை

எங்கள் கன்னி மாடு ஒன்றை ஒரு வாரத்திற்குமுன் காணவில்லை. இது சொக்கிலேட் கலருடனும், சின்னக் கொம்புடனும் காணப்படும். இது பற்றி தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து எங்களுக்கு அறியத்தரவும். றெட்ஸா கபே, 720, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [22875]

பிறின்ரிங்

பாவனை பில் புத்தகங்களை, வியாபார நிலையங்களுக்குத் தேவையான கலண்டர்கள் விலாசம் பதிப்பித்துக் கொள்ள நாட வேண்டிய இடம்: ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம். [22883]

SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature, ஆங்கிலத்தில் பேசப் பயிற்றுவிக்கப்படுகிறது. V. N. Kandasamy, A I. B. (Part I) (London), Inter (London) 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். [5382]

தரன் ஸ்ருடியோ

குறைந்த கூலி, குறித்த நேரம், தரன் ஸ்ருடியோ. தீபாவளித் தினத்தை முன்விட்டு 09-10-92 — 27-10-92 வரை சகல வித போட்டோ மற்றும் வேலைகளுக்கு இல. 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [22820]

மொழி தேர்ச்சி (ஆண்டு-5)

புலமைப் பரிசில் பரீட்சையில் உச்சப் புள்ளி பெறத்தக்க வகையில், அனைத்து வகை வினாக்களும் 21 அலகுகளாக வகுக்கப்பட்டு, ஆக்கப்பெற்ற உன்னத நூல். ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.), வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [5383]

இலக்கிய விருது

லண்டன், அக். 15

இலங்கையில் பிறந்த கனேடியரான மைக்கல் ஒன்டாஜேயும், பிரிட்டிஷ் எழுத்தாளரான பரி அன்ஸ்வேர்த்தும் பிரிட்டனின் அதி பெருமைக்குரிய இலக்கிய விருது ஒன்றைக் கூட்டாகப் பெற்றனர்.

பரி அன்ஸ்வேர்த்துக்கு அவர் எழுதிய ''சீக்ரெட் ஹங்கர் (Secret Hunger) என்ற நூலுக்கும், மைக்கல் ஒன்டாஜ்ஜுக்கு ''த இங்கிலிஷ் பேஷன்ட்'' (The English Patient) என்ற நாவலுக்கும் இவ்வாண்டின் சிறந்த நூலுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. (ஒ-த)

உபவேந்தர்கள் நியமனம்

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் எஸ். சந்தானமும், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக டபிள்யூ. பி. ஹொரகும்புரவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த)

பனங்கட்டிக்கு மவுசு!

சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், பனங்கட்டிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் பனங்கட்டியின் விற்பனை அதிகரித்துள்ளது. தனியார் கடைகளிலும் பனங்கட்டி தாராளமாகக் கிடைக்கிறது. (ஒ-154)

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
29
04
1956

விண்ணில்:
27
09
1980

குணபாலசிங்கம் உமாகாந்தன்

(முன்னாள் காந்தன் இரும்புத் தொழிற்சாலை, உரிமையாளர்-318, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்)

திதி: 15 — 10 — 1992

அன்பின் உருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் இருப்பிடமாய், கடமை வீரனாய், காலமெல்லாம் இனிதே கழித்து இறைவனின் காலடிதான் தஞ்சமென்று திடீரென்று சென்று 12 ஆண்டுகள் நிறைவு பெறும் இந்நாளில், உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

கோப்பாய்
(22890)

யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

பழைய மாணவர் சங்கம்

புனரமைப்புக் கூட்டம்

காலம்: 18-10-1992 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10 மணி.
இடம்: பிரதான மண்டபம்

நிகழ்ச்சிகள்

1. இறைவணக்கம்
2. வரவேற்புரை
3. யாப்பு அங்கீகரித்தல்
4. நிர்வாகக்குழு உறுப்பினர் தெரிவு
5. பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர் மூவர் தெரிவு
6. சபையோர் குறிப்புரை
7. நன்றியுரை

சகல பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

கா. சந்திரபாலன்,
அதிபர்.

(5881)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் மலர்வு:
23 — 06 — 1959

○ ○ ○

அன்னியப் படையின் பறிப்பு:
15 — 10 — 1987

சதாசிவம் சிவகுமார் (சடா)

ஆறாத நினைவுப் பூமலர்கள் சொரிந்து ஆண்டைந்து கரைந்த பின்னும் எம்மனத்து வாடாத முகமலரின் நினைவில் வாடி - உன் ஆத்ம சாந்திக்காய் அர்ச்சிக்கின்றோம்;

அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

கொய்யாத்தோட்டம்,
இருபாலை.

[22864]

8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
10 — 07 — 1957

மறைவு:
14 — 10 — 1984

● ●
●

திதி:
15 — 10 — 1992

சந்திரதாசன் ராதாதேவி

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டீர்! உமது ஆத்மா சாந்தியடைய 8ஆவது திதி நாளாகிய இன்று இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மகள் - வமிந்தா,
ஐயா, அம்மா,
அத்தான்மார் - குணம், லிங்கம்,
அக்காமார் - ரதி, ரஞ்சி.
தம்பிமார் - ரகு, கிறி, மனோ, பாலி;
மைத்துனிமார் - ஈஸ்வரி, சீலா,
அரசி, மாலா;
பேரமக்கள், மருமக்கள் மற்றும் உறவினர்

புங்குடுதீவு - 3,

15/4, குளப்பிட்டி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(22891)

யாழ்ப்பாணம்
நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

இளவாலை வயற் பகுதியில் முகாம்!

வீடுகளை இடித்து முகாமுக்கு அரண்!!

இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் மீண்டு வந்துள்ளவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன

ஆயிரக்கணக்கான பனைகள் நாசம்!!!

வலி. வடக்குப் பகுதியில் ஆகஸ்டில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இளவாலைப் பகுதியில் வயல்வெளி ஒன்றில் பாரிய முகாம் ஒன்றை அமைத்து முகாமிட்டுள்ளனர்.

இந்த முகாமை அமைப்பதற்காக அங்குள்ள பல ஆயிரக்கணக்கான பனைமரங்களைப் படையினர் தறித்து அழித்து விட்டனர்.

குறிப்பிட்ட சில இடங்களில் பனங் கூடல்கள் இருந்த இடமே தெரியாதவாறு வெட்டித் தறிக்கப்பட்டு விட்டன!

இம் மரங்களை வயல்வெளி முகாமின் பாதுகாப்பு அரண்களுக்கு, தாம் நினைத்தவாறு வரிசை வரிசையாக அடுக்கி வைத்துள்ளனர்.

இது மட்டுமா?

அங்குள்ள பெரும் எண்ணிக்கையான வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்தும், உடைத்து நொருக்கியும் நாசமாக்கி அவற்றின் இடிபாடுகளை எடுத்துச் சென்று கொட்டி பெரிய முகாமுக்கு அரண்கள் அமைத்துள்ளனர்.

இன்னும் பல வீடுகளில் இருந்த மரங்கள் மற்றும் கூரைச் 'சீற்று''கள் கழற்றப்பட்டு, முகாம் தேவைக்குப் பாவிக்கப்பட்டுள்ளன.

மதில்கள், வேலிகள் உடைத்தும், எரித்தும் அழிக்கப்பட்டும், இளவாலைப் பகுதி ஒரே வெளியாகக் காட்சியளிக்கிறது. புல்டோசர்கள், டிராக்டர்கள் மூலம் நிலப் பகுதி சமப்படுத்தப்பட்டு, காணிகளில் எல்லைகளே தெரியாதவாறு பெரிய மைதானம் போல் சில பகுதிகள் தோற்றமளிக்கின்றன.

அங்கு நிலை கொண்டுள்ள படையினர், ஆடு, மாடுகள் மற்றும் கோழிகளை 'வேட்டை'யாடி வருகின்றனர். இங்கிருந்த பெரும் எண்ணிக்கையான கால்நடைகள், கோழிகள் படையினரின் வயிற்றை நிரப்பி விட்டன!

அளவெட்டிப் பகுதியிலும் படையினரின் அட்டூழியங்களுக்கு குறைவில்லை. அங்கு சிக்குண்டவர்களில் அனேகர் முதியவர்களே.

நீரிழிவு நோயாளருக்கு 3 வேளை சோறு

இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் சிக்குண்டவர்களுக்கு பெரும்பாலும் மூன்று வேளைகளிலும் சோறும், கருவாட்டுக் கறியுமே வழங்கப்பட்டு வருகிறது.

சில சமயங்களில் பாண், நூடில்ஸ், கடலை, பயறு போன்றவையும் வழங்கப்படுகின்றன.

நீரிழிவு போன்ற நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பயத்துடன் தொடர்ந்து சோற்றைச் சாப்பிட்டு வருகின்றனர். அவர்கள் தொடர்ந்து சோறு சாப்பிட்டு வருவதால், வியாதி முற்றி 'கோமா' போன்ற உயிராபத்தான நிலையை அடைந்து விடுமோ என அஞ்சுகின்றனர்.

படையினரிடம் சிக்கியுள்ளவர்களில் பெரும்பாலானோர் உறவினர்களை இழந்தும், பிரிந்தும் இருப்பதால், உளவியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டே உள்ளனர்.

(ஒ-15-13)

உதயன்

மனித நேயத்தை கூராக்குவோம்

அனைத்துலக வெள்ளைப் பிரம்பு தினம் இன்று அக்டோபர் பதினைந்தாம் திகதியாகும்.

பிறப்பிலேயே விழிப்புலனை இழந்தவர்களதும், வாழ்க்கையின் இடைநடுவில் கண்பார்வையை இழந்தவர்களதும் அடையாளச் சின்னமாக, வெள்ளைப் பிரம்பு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரம்பு அவர்களுக்குக் கண்ணுக்குச் சமமானது. அவர்கள் அடுத்தவர்களின் உதவியின்றி, அடுத்தவர்களின் தயவில் தங்கியிருக்க வேண்டிய தேவையை நீக்கித் தனித்தியங்க வைக்கும் சாதனம்.

ஒரு மனிதனது பூரணமான வாழ்க்கை இயக்கத்துக்கு அவனுக்கு ஐம்புலன்களும் தேவைப்படுகின்றன. உடலின் சகல அங்கங்களும் செவ்வனே செயற்படுவனவாக இருப்பதும் அவசியம். ஆனால் ஒரு புலனை இழந்தவர்களையோ, ஏதாவது ஓர் அங்கத்தை இழந்து ஊனமுற்றவர்களையோ சமூகம் ஒதுக்கி வைப்பதில்லை; ஒதுக்கக் கூடாது.

புலன் இழந்தவர்களும், ஊனமுற்றவர்களும் மனித சீவன்களே. அவர்களும் இந்த சமூகத்தின் அங்கமே. புலனிழக்காத அல்லது ஊனமுறாத சாதாரண மக்களுக்கு உள்ள சகல உரிமைகளும், வாழ்வுரிமைகளும் புலனிழந்தவர்களுக்கும், ஊனமுற்றோருக்கும் உண்டு. ஏனையோருக்குள்ள வாய்ப்புகள், வசதிகளைப் போல அவர்களுக்கும் சம உரிமைகள், சம வாய்ப்புகள் அவசியம்.

மேலை நாடுகளில் புலனிழந்தவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் சம வாய்ப்புகள், சம உரிமைகள் மட்டுமன்றி மனிதநேயத்தின் பாற்பட்டு மேலதிக சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவை சட்ட ரீதியாக்கப்பட்டும் உள்ளன.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பாடிய வள்ளுவன் வழி வந்த தமிழர் மத்தியில், புலனிழந்தோருக்கும் ஊனமுற்றோருக்கும் சமத்துவமும், சம உரிமையும், சம வாய்ப்பும் வழங்கும் மனித நேயம் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்பது கவலைக்குரியதாகும்.

புலனிழந்தோர், ஊனமுற்றோருக்கு சம உரிமைகளை வழங்கி, சமூக அங்கீகாரம் வழங்கி, அவர்கள் மற்றவர்கள் தயவின்றித் தமது சொந்தத்தில் இயங்கக் கூடிய வாய்ப்புகளை உண்டாக்குவதில் போதிய அக்கறை காட்டப்படவில்லை.

எம்மில் பலரும் மனிதாபிமானம் உடையவர்களாக மனித நேயம் உள்ளவர்களாகக் காட்டிக் கொள்கின்றோமே அன்றி, அது குறித்துப் பேசிக் கொள்கின்றோமே அன்றி செயலளவில் ஆக்கபூர்வமாக, பெரிய அளவில் எதனையும் சாதித்து அவர்களின் வாழ்க்கைக்கு நிறை ஒளி ஏற்றிடவில்லை. இது நாமே நமது சமூகத்துக்குச் செய்யும், எமது எதிர்கால சமூகத்துக்கு இழைக்கும் பெரும் கெடுதலாகும்.

இன்றைய வெள்ளைப் பிரம்பு தினம் தமிழர்களின் மனித நேயச் சிந்தனையைக் கூராக்கி, செயல் வடிவம் கொடுப்பதாகுக. இன்று அடுத்தவருக்கு, நாளை எமக்கு அருகிலிருப்பவருக்கு, மறுதினம் எம்மைச் சேர்ந்தவர்களுக்கு என்று நினைப்பதன் மூலம் எமது மனிதாபிமானத்தையும், மனித நேயத்தையும் வளமூட்டிச் சீராக்கிச் செழிக்கச் செய்யலாம்.

சுற்றாடல் அபிவிருத்தி மாநாடு நாளை கனடாவில் ஆரம்பம்

ரொரன்டோ, அக். 15

சுற்றாடல் அபிவிருத்திக்கான கல்வி மற்றும் தொடர்பியல் சம்பந்தமான உலக காங்கிரஸ் மாநாடு நாளை (16ஆம் திகதி) கனடாவின் ரொரன்டோ நகரில் ஆரம்பமாகின்றது

இதே வேளை —

ஐ நாவின் ஏற்பாட்டில் ஸ்பெயினில் அண்மையில் நடைபெற்ற பூமி உச்சி மாநாட்டின் தொடர்ச்சியாக தென்கிழக்காசிய சுற்றாடல் அபிவிருத்தி அமைப்பு அதன் தலைவர் டாக்டர் நகுலேஸ் கதிர்காமநாதன் தலைமையில் அண்மையில் கொழும்பில் கூடியது.

கொழும்பு மாநாட்டில் தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த பல அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டின் பரிந்துரைகளை டாக்டர் கதிர்காமநாதன் நாளை கனடாவில் ஆரம்பமாகும் கூட்டத்தில் நேரில் கலந்து கொண்டு சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந)

சு. கவின் பிக்குகள் அணிக்கு சிறிமா தடை விதிப்பு!

கொழும்பு, அக் 15

சுதந்திரக் கட்சியின் பௌத்த பிக்குகள் அமைப்புக்கு கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தடை விதித்துள்ளார் என்று நேற்றுக் கொழும்பில் செய்தி வெளியாகி இருந்தது.

இதற்கிடையில் —

சுதந்திரக்கட்சியின் வாலிப முன்னணி மற்றும் பிக்குகள் முன்னணி ஆகியவற்றுக்கு நிர்வாகிகளை தெரிவு செய்ய அண்மையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பயமுறுத்தல் மற்றும் முறைகேடுகள் இடம் பெற்றதாக சுதந்திரக்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தார்.

அப்படி ஒரு நிலைமை இனி ஏற்படுவதைத் தம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையில் —

கட்சியின் வாலிப முன்னணி, பிக்குகள் முன்னணி ஆகியவற்றை அனுரா கோஷ்டியினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-த-எ)

கல்வி வியாபாரப் பொருள் என்ற நிலைமாற வேண்டும்

பரிசளிப்பு விழாவில் யோகி

அச்சுவேலி, அக். 14

மனிதத்தத்துவத்தை, மண்ணை சமூகத்தை நேசிக்கின்ற தன்மையை கல்வி ஊடாக மாணவர்கள் பெற வேண்டும். கல்வி ஒரு வியாபாரப் பண்டமல்ல. இன்றுள்ள அந்தநிலை மாறவேண்டும்.

இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு யோகரட்ணம் யோகி

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கல்லூரி 'அதிபர்' அருட் சகோதரி மேரி [illegible] தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் யோகி தொடர்ந்தும் உரையாற்றுகையில்—

இன்று கல்வியில் போலித் தன்மை காணப்படுகிறது. பிரபல பாடசாலை, நகரப் பாடசாலை என்ற மோகத்தினால் மாணவர்களும், பெற்றோரும் அலைகின்றனர். அந்தந்தப் பிரதேசத்திலேயே கல்விகற்க மாணவர்களும் பெற்றோர்களும் முன்வர வேண்டும். அதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படல் வேண்டும்—என்றார்.

பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து [illegible]

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிப்பதற்கு இன்னும் 2 ஆண்டும் 72 மணியுமா?

செய்தியாளர் மாநாட்டில் சூடான கேள்வி

யாழ்ப்பாணம், அக். 15

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிய இன்னும் இரண்டு ஆண்டுகளும் 72 மணித்தியாலங்களும் செல்லுமாஎன்று கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இது என்ன புதுக் கணக்கும் நேரமும்! இம் மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற வாராந்திரச் செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவருக்கும் அமைச்சர் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற கேள்வி பதில்களை வாசித்துப் பாருங்கள்!

செய்தியாளர்: 2 லட்சம் பேரைத் தந்தால் யுத்தத்தை 72 மணித்தியாலத்தில் முடித்து விடுவதாக இராணுவ உயர் தளபதி கூறியுள்ளாரே!

அமைச்சர் ரவில்; ஏராளமான ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

செய்தியாளர்: ஆம். தேவை ஏற்பட்டால் அவ்வளவு படையினரைத் திரட்டிக் கொடுக்க முடியுமா?

அமைச்சர்: 2 லட்சம் பேரைத் திரட்ட, இரண்டு ஆண்டுகள் செல்லும்.

செய்தியாளர்: அப்படியானால் யுத்தம் முடிய இன்னும் 2 ஆண்டுகளும் 72 மணித்தியாலங்களும் செல்லும் என்கிறீர்கள்! (ஒ-எ)

யானைக்குக் குடும்பக் கட்டுப்பாடு!

லண்டன், அக். 15

யானைகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இது எங்கு தெரியுமா?

ஆபிரிக்கக் காடுகளில் உள்ள யானைகளுக்குத் தான் குடும்பக் கட்டுப்பாடு தேவைப்படுகிறதாம். அங்கு யானைகள் கட்டுக்கடங்காமல் பெருகி வருவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதை எப்படி செயற்படுத்துவது என்பது பற்றி அண்மையில் கென்யாவில் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது.

அங்கு பேசிய நிபுணர்கள் —

'ஆண்—பெண் யானைகளைப் பிரித்து வைப்பது சரியல்ல. ஆண் யானைக்குக் கருத்தடை உறை உபயோகப்படுத்துவதும் சாத்தியமல்ல.

'எனவே பெண் யானைகளுக்கு ''ஸ்ரெராய்ட்'' செலுத்திய வாழைப்பழங்களைக் கொடுத்து கருக்கலைப்புச் செய்து விடலாம்' என்று கூறினர்.

(ஒ)

'ஹெல உறுமய' நிகழ்ச்சியில் கோஷ்டிக் கலவரம்!

கொழும்பு, அக். 15

சுதந்திரக் கட்சியிலுள்ள ''ஹெல உறுமய'' அணித் தலைவர் திலக் கருணாரத்னா பாணந்துறையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போது அங்கு இரு அரசியல் கோஷ்டிகளுக்கு இடையே மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாணந்துறையில் அலுபோமுல்ல என்னுமிடத்தில் சமீபத்தில் இடம் பெற்ற இக் கலவரத்தில் பலர் காயமடைந்தனர், இரண்டு பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

அங்கு விஜயம் செய்த திரு. கருணாரத்னாவை ஒரு பிரிவினர் வரவேற்க, இன்னொரு பிரிவினர் வரவேற்ற குழுவினருடன் மோதலில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஆக். 15

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

17 வயதுப் பிரிவு

17 வயதுப் பிரிவில் யாழ். இந்து மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு :-

★ அராலி இந்து எதிர் நெல்லியடி ம. வி

★ சென். ஹென்றீஸ் எதிர் யாழ். மத்திய கல்லூரி.

19 வயதுப் பிரிவு

19 வயதுப் பிரிவில் யாழ். சென். ஜோன்ஸ் மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ மானிப்பாய் இந்து எதிர் ஹாட்லி.

★ நெல்லியடி ம. வி. எதிர் மகாஜனா. [உ]

★ ★ ★

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ றோயல் எதிர் சென். நீக்கலஸ்.

★ சென். மேரிஸ் எதிர் சென். அன்ரனிஸ்.

★ ★ ★

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ குருநகர் தொடர்மாடி ''ஏ'' எதிர் மயிலங்காடு ஸ்ரீ முருகன் ''ஏ''

உரும்பராய் சென். மைக்கல்ஸ் ''ஏ'' எதிர் திருநகர் கிறீக்பீல்ட் ''ஏ'' [உ]

இரத்தினபுரியில் வெள்ளம்

கொழும்பு, அக். 15

இரத்தினபுரியில் கடும் மழை பெய்து வருவதால் அங்கு தாழ்ந்த பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

அங்குள்ள குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டு தற்காலிகமாக வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரிச் சந்தையில் இரண்டரை அடிக்கு நீர் உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேசமயம் ஜின் கங்கையும் பெருக்கெடுத்துள்ளது இதனால் புத்தளம் மாவட்டத்தில் நாத்தாண்டிய, வென்னப்புவ, தங்கொட்டுவ பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அளவெட்டியில் மீண்டும் தபாலகம்

அளவெட்டி, அக். 15

அளவெட்டித் தபாலகம் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் அளவெட்டியிலேயே இயங்கி வருகிறது.

சமீபத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இத் தபாலகம் மானிப்பாயில் இயங்கி வந்தது தெரிந்ததே

தபாலகம் மீண்டும் அளவெட்டியில் இயங்க ஆரம்பித்ததை அடுத்து தமது வெளிநாட்டு— உள்நாட்டுத் தபால்களைப் பெறுவதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் இத் தபாலகத்தில் கூடி நிற்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அளவெட்டி வடக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கான தபால் விநியோகமும் தற்போது நடைபெற்று வருகிறது. [இ-13]

1987 ஒப்பந்தம் குறித்து பிரஸ்தாபிக்கப்படாதது ஏன்?

இலங்கை - இந்திய கூட்டறிக்கை குறித்து விமர்சனம்

கொழும்பு, அக். 15

சமீபத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இரு நாடுகளின் தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில் 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. இது குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள் விமர்சனம் செய்துள்ளன.

இவ்வாறு சண்டே ரைம்ஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

''இரண்டு சரித்திர கால நண்பர்கள் தங்கள் உறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள உதவும் பஞ்சசீலசாசனமாக கடந்த மூன்றாம் திகதி புதுடில்லியில் வெளியிட்ட கூட்டறிக்கை உதவ முடியும்'' என்றும் ஆசிரியர் தலையங்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளது.

'எழுதாத உடன்படிக்கை' என்ற தலைப்பிலான அத் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''1987 இல் கைச்சாத்திடப்பட்டதும் கடுமையான நிபந்தனைகளைக் கொண்டதுமான ஒப்பந்தத்துக்கு முரணாகி எழுத்தில் இல்லாத நட்புறவு உடன்படிக்கையாக — சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விட்டுக்கொடுக்கும் ஒன்றாக — அக்கூட்டறிக்கையை கருதமுடியும்.

''அந்தக் கூட்டறிக்கையில் சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் கொண்ட புதிய உணர்வலைகள் தென்படுகின்றன.

தமிழரின் சட்டபூர்வமான அபிலாஷைகளுக்கு நீதியான சமத்துவமான தீர்வு காணப்படும் என்று நம்புவதாகவும் அந்த கூட்டறிக்கையில் இந்தியா கூறியிருக்கிறது.

'தமிழரின் சட்டபூர்வமான அபிலாஷைகள்' என்ற சொற்றொடர் கூட்டறிக்கையில் இடம்பெற இலங்கை விட்டுக்கொடுத்திருப்பது ஓர் ஆரோக்கியமான விஷயம் என்று இந்திய பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்''

இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

வி. பி. சிங் விடுதலை

லக்னோ, அக். 15

உத்தரப் பிரதேச மாநிலத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கும் முன்னாள் மாநில முதலமைச்சர் முலாயம்சிங் யாதவும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விவசாயிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளை கண்டித்து, கோரக்பூர்— ராமலீலா நகருக்குச் சென்றபோது இவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். (இ-எ)

வடக்கின்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வாதார அபிவிருத்திக்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது குறித்தும் —

அதற்கான நிதியை கனடாவிடமிருந்து பெறுவது குறித்தும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் குறித்து இந்த அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனமே (இ.ஏ.ஆர். டி) ஆய்வுகளை மேற்கொள்வது நடைமுறை.

சம்பந்தப்பட்ட ஆய்வுகள் பற்றிய அறிக்கையை, லண்டனில் உள்ள தலைமையகம் ஆராய்ந்து அங்கீகரித்ததும், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு கொமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடு ஒன்றில் இருந்து நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது வழக்கம்.

இந்த வகையில் வடக்கில் விவசாயம் சார்ந்த நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முயற்சிக்கு கனடா உதவ முன்வந்துள்ளதாக கொமன்வெல்த் நாடுகள் அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பிந்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் கலாநிதி சார்ள்ஸ் கிரேஜா, வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு உதவுவதில் அக்கறையாக இருப்பதாகவும் —

உதவியை ஸ்ரீலங்கா அரசின் ஊடாக அன்றி நேரடியாக வழங்க தீர்மானித்துள்ளதாகவும் — அறிய வந்துள்ளது. [அ-3]

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தைத் தொடருவதற்கான அனைத்து உபாயங்களையும் விடுதலைப் புலிகள் பூரணமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்குலகில் தனது நடவடிக்கைகளுக்கு சட்ட ரீதியான ஆதரவைப் பெறவேண்டிய தேவை ஏற்படின் அதற்காக யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்யும் நிலையிலும் புலிகள் இயக்கம் உள்ளது.

யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உரிய நிலை இல்லை என்று புலிகள் உணர்ந்தால் அதற்கேற்ற உகந்த நடவடிக்கைகளை எடுக்கும் நிலையிலும் புலிகள் உள்ளனர் என்றும் அந்த விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-எ]

கடலில் மிதந்து வந்த மரக்கறி முடைகள்!

யாழ்ப்பாணம், ஆக். 15

இளவாலைக் கடலில் செவ்வாய்க்கிழமை மாலை சாக்கு முடைகள் ஆடி ஆடி மெதுவாக வந்தபோது அவை சடலங்களாக இருக்க வேண்டும் என்று கரையில் நின்ற மக்கள் அஞ்சினர். கரையில் இருந்து கண்ணுக்கு எட்டிய தூரத்தில் பத்துக்கும் மேற்பட்ட சாக்கு முடைகள் இவ்வாறு மிதந்து வந்தன.

இத் தகவல் அறிந்து கரையில் ஏராளமான மக்கள் கூடினர். சாக்கு முடைகள் கரை வந்து சேரும்வரை பொறுக்க முடியாத இளைஞர்கள் சிலர் நீந்திச் சென்று அருகில் பார்த்தனர்.

சாக்கு முடைகளில் இருந்தவை மரக்கறி எனத் தெரிந்து கொண்டனர். அவற்றைக் கரைக்கு இழுத்து வந்து பிரித்துப் பார்த்தபோது பழுதடையாது இருக்கக் கண்டு கரையில் நின்ற மக்களுக்கும் கொடுத்து தாமும் எடுத்துச் சென்றனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலின்போது இந்த மரக்கறி முடைகள் கடலில் வீழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (அ-117)

தனியார் ஆஸ்பத்திரிகளை கண்காணிப்பதற்குச் சபை

தனியார் ஆஸ்பத்திரிகளையும் மற்றும் மருத்துவ மனைகளையும் கண்காணிப்பதற்காக சபை ஒன்றை நிறுவ அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதேசமயம் தனியார் ஆஸ்பத்திரிகள் மற்றும் மருத்துவ மனைகளைக் கண்காணிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கும் மாகாணசபைக்கும் பொதுவான விஷயங்கள் பட்டியலில் இருப்பதால், இது குறித்து சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்குமிடையே கலந்தாலோசனை இடம்பெறவேண்டும் என்று சட்டம் கூறுவதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில்—

மேற்கு மாகாணத்தில் உள்ள தனியார் மருத்துவ மனைகளை கண்காணித்து கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்ள விரும்புவதாக மேல் மாகாண சபை விருப்பம் தெரிவித்துள்ளது. [இ-எ]

கிழக்கு இலங்கை பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா

கிழக்கு இலங்கை பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 94 பேருக்கு அப்போது பட்டங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

மரண அறிவித்தல்கள்

செபமாலை அக்னஸ்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், உயிர்த்தராசன் குளத்தை வதிப்பிடமாகவும் கொண்ட செபமாலை அக்னஸ் 10-10-92 இல் இளவாலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ் செபமாலையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை றோசப்பிள்ளை, சின்னப்பு, வரோணிக்கா, சவரிமுத்து யோசேப்பு [அச்சுவேலி], தம்பு சலோமைப்பிள்ளை [அச்சுவேலி], சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (இளவாலை] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரின் நல்லடக்கம் இளவாலை புனித அன்னம்மாள் சேமக்காலையில் 10-10-92 இல் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. மரியதாசன்
[சிங்கம்]

'கோணேச இல்லம்'
275, யாழ். வீதி,
மானிப்பாய்.

(5388)

சரவணமுத்து சங்கரப்பிள்ளை

(இளைப்பாறிய கோட்டன் எஸ்ரேற்தலைமைக்குமாஸ்தா)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு திருமதி சரவணமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் மலவராயர் சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பியின் அன்பு மருமகனும், திருமதி முத்துப்பிள்ளை - சின்னத்தம்பியின் அன்புச் சகோதரனும் கோட்டன் எஸ்ரேற் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தவருமான, திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை 14-10-92 இல் காலமாகிவிட்டார்.

இவர் சுகந்தன் [லண்டன்], சுரன்யா [பொட்ஸ்வானா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாஜி [பொட்ஸ்வானா], சுமித்திரா [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-10-92 பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சங்கரப்பிள்ளை

கைதடி வடக்கு,
கைதடி.

(22904)

மரண அறிவித்தல்

கற்பர் ஆழ்வாப்பிள்ளை

வதிரி பஞ்சிதோட்டத்தைச் சேர்ந்தவரும், கிளிநொச்சி நாதன்கூலஸ், ஜஜஸ் ஆகியவற்றின் உரிமையாளரும் பருவதத்தின் அன்புக் கணவரும்—

இலங்கைநாதன், இராமநாதன், பரமநாதன், பரஞ்சோதி சௌந்தரேஸ்வரி, ஜெயரத்தினம் இராஜேஸ்வரி, இராசதுரை ஜீவரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமான கற்பர் ஆழ்வாப்பிள்ளை 14-10-92 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஜெயரத்தினம்,
(மக்கள் வங்கி நெல்லியடி)
க. இராசதுரை
(ராஜீ குபலஸ் பருத்தித்துறை)
(மருமக்கள்)

(22905)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.